அத்தியாயம்-1

சனிக்கிழமை காலை என்பதை சொல்லிக்கொடுக்க வேண்டியதே இல்லை பக்கரூவிற்கு. அவனுக்கு முந்தின நாள் இரவே நடக்கும் கூத்தின் மூலமாக புரிந்து விடும். அருண் அடிக்கும் கொட்டம் ஒன்று போதும். வெள்ளிக் கிழமை இரவு மணிக்கணக்காக streaming tv பார்த்தாக வேண்டும். அருணுக்கு பிடித்த tv serial மாத்தி மாத்தி அடுத்து அடுத்ததாக பார்த்தாக வேண்டும். கீதாவிற்கும் ரமேஷிற்கும் எப்படா முடியும் என்றாகிவிடும். பக்கரூவும் இதில் கூட்டு. “லொள் லொள்” என்று குரைத்து அவனும் தனக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வான்.

சனிக்கிழமை காலையில் முந்தின நாள் இரவின் தாக்கம் தெரிய வரும். அன்று ஒரு நாள் தான் அருணுக்கு ஒரு engagement கூட கிடையாது. Special class, விளையாட்டுக்கள் என்று எதுவும் கிடையாது. மற்ற நாட்களில் அவனுக்கு இருக்கும் busy schedule-இற்கு அருணால் மூச்சு கூட விட முடியாது. அப்படி ஒரு busy ஆன வாழ்க்கை, இந்த சின்ன வயசிலேயே அவனுக்கு.

பக்கரூவிற்கு சனி ஞாயிறு என்றால் ஒரே குஷி. அருணுக்கு பள்ளிக்கூடம் போகும் அவசரம் கிடையாது என்று பக்கரூவிற்குத் தெரியும். அதனால் காலையில் சீக்கிரமே எழுந்து காத்துக் கொண்டிருப்பான். கீதா மட்டும் எப்போதும் போல் காலையில் எதாவது சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருப்பார். அவருக்கு ஓய்வு என்பதே கிடையாது. காலையில் தாமதாக எழுந்து நாள் முழுவதும் வீணடிக்க அவருக்குப் பிடிக்காது. ரமேஷோ அதற்கு நேர்மார். தூங்க விட்டால் தூங்கிக் கொண்டே இருப்பார்.

அருண் தூங்கிக்கொண்டிருந்ததால் பக்கரூ வாலை ஆட்டியபடி கீதாவின் அருகில் வந்தது. அவன் விளையாட ஆள் தேடுகிறான் என்று கீதாவிற்கு புரிந்தது. ஆனாலும் பக்கருவைக் கண்டு கொள்ளாமல் இருந்தார். பொறுத்துப் பார்த்த பக்கரு கோபத்தில் கத்த ஆரம்பித்தது.

“அருண்! அருண்! பக்கரூ கூப்பிடறான் பாரு” கீதா அருணை அப்படியாவது எழுப்ப முடியுமா என்று பார்த்தார். “நான் jogging போகப் போறேன். வறியா?”

கீதாவிற்கு என்ன பதில் வரும் என்று நன்றாகத் தெரியும். முந்தி மாதிரி இப்பொழுதெல்லாம் அருண் அவரோடு ஜாகிங் வருவது அவ்வளவாக இல்லை. முந்தின மாதிரி ஒரு உற்சாகம் இல்லை. ஆனாலும் உடம்பு ஆரோக்கியம் காரணமாக அவரின் வற்புறுத்தலால் அருண் முனகிக் கொண்டே வருவான்.

கீதா ஜாகிங் போய்விட்டு வந்தார். பக்கருவை அழைத்துப் போனார். வீட்டில் இன்னும் ரமேஷும் அருணும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

“ரமேஷ்! ரமேஷ்! நீங்களாவது எழுந்திருங்களேன். மணி பத்தாச்சு.”

கீதாவிற்கு சற்று எரிச்சல் வந்தது. தன்னைப் போல் மகனும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அருணோ, ரமேஷைப் போல கொஞ்சம் take it easy ஆக இருந்தான்.

“அருண்! அருண்!”

கதவு திறக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார் கீதா. ரமேஷ் நின்று கொண்டிருந்தார்.

“எதுக்கு இப்பிடி காலங்கார்த்தால கத்தற? ஒரு நாள் தூங்கினா என்ன தப்பு?” ரமேஷ் கொட்டாவி விட்டுக் கொண்டே கேட்டார். “மத்த நாள் தான் அந்த class இந்த classனு அவனைப் படுத்தியாகிறது.”

கீதாவிற்கு ரமேஷ் சொல்வதில் நியாயம் இருந்தாலும், அவருக்கு எரிச்சல் அதிகமாகியது. பதில் கொடுக்க நினைத்தார். சரி வேண்டாம் என்று விட்டுவிட்டார். பக்கரூவை ஒரு முறை விட்டார். அது பயந்து அருணின் அறைப் பக்கம் ஓடியது.

மெதுவாக அருணின் அறைப்பக்கம் கீதா சென்றார். அருண் மெத்தையில் அமர்ந்து பக்கரூவுடன் பேசிக் கொண்டிருந்தான். பக்கரூ அவனை நக்கிக் கொண்டிருந்தது.

“மணி என்ன தெரியுமா?”

அருண் பதில் சொல்லாமல் பக்கரூவுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

“அருண், பல் விளக்கினியா?”

அப்பொழுதும் பதில் சொல்லாமல் எதோ ஒரு உலகத்தில் அவன் இருந்தான்.

“பக்கரூ!” சற்றே ஒரு அதட்டலுடன் கூப்பிட்டார். பக்கரூ படாரென்று குதித்து அறையின் வெளியே ஓடியது.

அருண் அப்பொழுது தான் கீதா நிற்பதைப் கவனித்தான்.

“Hi அம்மா! குட் மார்னிங்! இன்னிக்கு என்ன breakfast? வெளியே போலாமா?”

கீதா மௌனமாக இருந்தார்.

“How about ஒரு குட்டி ரன் பண்ணி அப்படியே donut & bagel வாங்கிட்டு வரலாமா அம்மா?”

கீதா அதற்க்கும் மௌனமாக இருந்தார். அருண் அவன் உலகத்தில் இருந்து கொண்டு அவனே பேசிக்கொண்டிருந்தான். படுக்கையை விட்டு எழுந்து அப்படியே போனான். கீதா அவனைத் தடுத்தார். என்ன என்று கேள்வி கேட்காமல் அவரைப் பார்த்தான். கண்ணால் ஜாடை காட்டினார்.

“அப்புறமா மடிச்சு வைக்கறேன். After I am done with breakfast.”

கீதா விடவில்லை.

“Now!”, என்றார். அவர் குரலில் கண்டிப்பு இருந்தது.

“Okay”, என்று சொல்லிக்கொண்டே அவனது படுக்கையை சரி படுத்தினான்.

“Satisfied?” என்று ஒரு செறுக்கோடு கேட்டான்.

“One more thing,” என்றார் கீதா.

“What?” சற்றே எரிச்சலோடு கேட்டான் அருண்.

கையை மேல் நோக்கி காண்பித்தார், சுற்றிக் கொண்டிருந்த காற்றாடியை (ceiling fan) அணைக்கும்படி.

சுவிட்சை ஒரு தட்டு தட்டியபடி அருண் அங்கிருந்து நகர்ந்து சென்றான்.

கீதா மணியைப் பார்த்தார். மணி கிட்டத்தட்ட 11:30 ஆகி இருந்தது.

முடிவு அத்தியாயம்-1